# வித்யாமலர்

## டிசம்பர், 2018



Published by

# Vidyarambam Trust

# நிகழ்வுகள்

## திருநெல்வேலி மாவட்டம்



திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விஜய அச்சம்பாடு கிளை அலுவலகத்தில் வைத்து 19.06.2018, 20.06.2018, 21.06.2018 ஆகிய மூன்று நாட்களும் 1st Term Training Prema Madam, Viji Madam, Anandhi Mam, Srimathi Mam, ஆகியோரால் கொடுக்கப்பட்டது. இதில் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஒருங்கிணைப்பளார்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்ட பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.



21.06.2018 அன்று P.U PRIMARY SCHOOL (MUNANJIPATTI) க்கு Toy van குழந்தைகளோடு நமது அறக்கட்டளையின் பொது மேலாளர், செயலாளர், ஆலோசகர் ஆகியோர் விளையாடி மகிழ்ந்தார்கள்.



விஜய அச்சம்பாடு கிளை அலுவலகத்தில் வைத்து பயிற்றுனர்களுக்கு திருமதி. பிரபாவதி அவர்களால் 1st Term Training கொடுக்கப்பட்டது.




ஜுலை 2, 4, 9, 11 ஆகிய தேதிகளில் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வித்யாரம்ப மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. கன்னியாகுமரி பயிற்றுனர் (பிரியா) கூடன்குளம் பயிற்றுனர் (டயானா) விதை முளைத்தல் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுகிறாரகள்.

திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் VDG (Village Development Group) கூட்டம் நடத்தப்பட்டது. வித்யாரம்பம் ஆரம்பித்தது பற்றியும் அதன் செயல்பாடு பற்றியும் பேசப்பட்டது. அதன்பின் குழந்தைகளின் வளர்ச்சி பற்றி கலந்துரையாடப்பட்டது.







ஜுலை 30, 31 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வட்டவிளை அரசு நடுநிலைப்பள்ளியில் வைத்தும், திருநெல்வேலி மாவட்டத்தில் விஜய அச்சம்பாட்டில் வித்யாரம்ப அலுவலகத்தில் வைத்தும் Follow up Training நடத்தப்பட்டது.



இட்டமொழி Junior மறறும் மழலையர் மைய குழந்தைகள் paper straw வைத்து விளையாடுகிறார்கள்.



Karikovil Junior centre's குழந்தைகள் கப்பல் செய்து மகிழ்கிறார்கள்.

Ullas Trust மூலம் 07.07.2018 அன்று Touch the soil programme 4 பள்ளிகளில் நடைபெற்றது. 9 பள்ளிகளுக்கு 80 காசோலைகள் ரூபாய் 1000 வீதம் வழங்கப்பட்டது.



.

ஸ்ரீராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில் சமாரியா மேல்நிலைப்பள்ளி குழந்தைகளும், ஏ.வி.வே. ஜோசப் மேல்நிலைப்பள்ளி குழந்தைகளும், செந்திலாண்டவன் உயர்நிலைப்பள்ளி குழந்தைகளும் கலந்து கொண்டு காசோலையை பெற்றுக் கொண்டர்கள். DMNS மேல்நிலைப்பள்ளியிலேயும், ஜோசப் உயர்நிலைப்பள்ளியிலேயும், St. Annes மேல்நிலைப்பள்ளியிலேயும் Touch the soil programme நடைபெற்றது. இப்பள்ளியில் St. Andrews குழந்தைகளும், மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்



27.08.2018, 28.08.2018, 30.08.2018, ஆகிய தேதிகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் ULLAS SUMMIT வகுப்புகள் மற்றும் ELE வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

01.10.2018 & 02.10.2018 ஆகிய தேதிகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விஜய அச்சம்பாடு கிளை அலுவலகத்தில் திருமதி. பிரபாவதி அவர்களால் பயிற்றுனர்களுக்கான 2nd Term Training கொடுக்கப்பட்டது. 04.10.2018 & 05.10.2018 ஆகிய தேதிகளில் அரசு நடுநிலைப்பள்ளி வட்டவிளையில் வைத்து கன்னியாகுமரி பயிற்றுனர்களுக்கான பயிற்சி திருமதி பிரபாவதி மற்றும் திருமதி முத்துச்செல்வி ஆகியோரால் கொடுக்கப்பட்டது. இதில் மைய பயிற்றுனர்கள், மற்றும் ELE teachers கலந்து கொண்டனர்



## கன்னியாகுமரி மாவட்டம்



கன்னியாகுமரி மாவட்டத்தில் மருதங்கோடு பயிற்றுனர் மகிபா நெல் பயிரிடுதல் பற்றி செயல்பாட்டுடன் குழந்தைகளுக்கு விளக்குகிறார்.



30.10.2018 அன்று அரசு நடுநிலைப்பள்ளி, வட்டவிளையில் வைத்து Follow up Training நடந்தது. இறுதியில் இம்மையத்தின் ஆசிரியர், குழந்தைகள் நாற்று நட்டு மகிழ்ந்தார்கள். இதில் கன்னியாகுமரி மாவட்டத்தின் பயிற்றுனர்கள் கலந்து கொண்டார்கள்., இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் பிற ஆசிரியர்கள் பார்வையிட்டார்கள். .முளைத்த நெல் நாற்றை எடுத்து தனித்தனியே நடுகிறார்கள்.





திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 5 மாதங்களில் 97 பள்ளிகளில் 5029 குழந்தைகளுக்கு Toy van மூலம் விளையாட்டு உபகரணங்களை கொண்டு குழந்தைகளின் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கும் விதத்தில் விளையாட்டு முறையில் (English, Maths, India Map) கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. Mind Development game, ஞாபக சக்தியை வளர்க்கும் விதத்தில் அமைந்துள்ளது. குழந்தைகள் மிகவும் ஆர்வமாகவும், உற்சாகமாகவும், அனைத்து விளையாட்டு உபகரணங்ளையும் விளையாடி மகிழ்கின்றனர்.



## தூத்துக்குடி மாவட்டம்

28.06.2018 அன்று சங்கரன்கோவில் கிளை அலுவலகத்தில் வைத்து KIDS மைய ஆசிரியர்களுக்கான 1$^{st}$ Term பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் 14 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.



29.06.2018 அன்று சங்கரன்கோவில் கிளை அலுவலகத்தில் வைத்து SCJ, SCS மைய ஆசிரியர்களுக்கான 1st Term பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் 29 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.



05.07.18 முதல் 07.07.18 ஆகிய மூன்று தினங்கள் மதுரை மாவட்டம் மேலூர் தாலூகாவில் உள்ள சுந்தரராஜன்பட்டியில் KIDS, SCJ, SCS போன்ற மையங்களுக்கு **Ist Term** பயிற்சி அளித்து குழந்தைகளுக்கு Pre Test வைத்து மையங்கள் ஆரம்பிக்கப்பட்டது.



14-7-2018 அன்று சங்கரன்கோவிலில் உள்ள V.V.S உயர்நிலைப் பள்ளியில் வைத்து ULLAS Trust-ன் "Touch the Soil" Program நடைப்பெற்றது. இதில் 4 பள்ளிகளின் Scholarship மாணவர்கள் கலந்துக் கொண்டனர். (சங்கரன்கோவில், சுப்புலாபுரம், செவல்குளம் மற்றும் ரெங்கசமுத்திரம்). ULLAS Trust –லிருந்து திரு. குர்ராம், திரு. தமிழ்வாணன் மற்றும் V.V.S உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் தலைமையில் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. 9thstd மாணவர்களுக்கு My Diary of Dream –என்ற வகுப்பும், பின்பு 10thstd மாணவர்களுக்கு My Planner- என்ற வகுப்பும் நடத்தப்பட்டது. அனைத்து பள்ளியின் Toppers-களுக்கும் Scholarship காசோலை வழங்கப்பட்டது.

13.08.2018 அன்று SCS Tutor க்கு Refresh Training நடைபெற்றது. இதில் 15 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.



14.08.2018 அன்று SCJ Tutor க்கு Refresh Training நடைபெற்றது. இதில் 16 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் திருமதி. V. பிரபாவதி அவர்கள் அலுவலகத்திற்கு வந்திருந்தார்கள். Ice Breaking Game (Your Name, My Name) ஒவ்வொரு Subject நடத்தும் போதும் இந்த விளையாட்டை பயன்படுத்தி விளையாடுங்கள் என பிரபாவதி அக்கா கூறினார்கள். தமிழ், ஆங்கில, கணித பயிற்சியுடன் கப்பல், கத்திக்கப்பல், விசிறி இவற்றை காகிதத்தில் செய்ய பயிற்சி அளிக்கப்பட்டது.

18.08.2018 அன்று KIDS Tutor க்கு Refresh Training நடைபெற்றது. இதில் **15** பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். இதில் Your Name, My Name Game விளையாட்டு கற்றுக் கொடுக்கப்பட்டது. Shape Card-ல் பல்வேறு வடிவங்கள் அமைப்பை ஆசிரியர்கள் பார்வையிட்டார்கள்.





27.08.2018 அன்று வித்யாரம்பம் அறக்கட்டளையின் தலைவர் திரு. ரெங்கநாதன் ஐயா அவர்களின் பிறந்த நாளையொட்டி அழகுநாச்சியாபுரம் கிராமத்தில் உள்ள நமது மைய குழந்தைகளுக்கு கடலைமிட்டாய் வழங்கப்பட்டது. Scholarship வழங்கிய நான்கு பள்ளிகளில் 8ம் வகுப்பிற்கு ELE வகுப்புகளும் மற்றும் 9,10 ம் வகுப்பிற்கு SUMMIT வகுப்புகளும் இன்று ஆரம்பிக்கப்பட்டன.



25.09.2018 சங்கரன்கோவில் வித்யாரம்ப கிளை அலுவலகத்தில் II Term Training நடைபெற்றது. இதில் அனைத்து மாவட்டங்களில் இருந்து வித்யாரம்ப தொண்டர்கள் கலந்து சிறப்பித்தனர். திருமதி. V. பிரேமா Madam அவர்கள் நமது நாகை பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி. S. கார்த்திகா மற்றும் செல்வி. ராஜலட்சமி ஆகியோர் நல்லாசிரியர் விருது வாங்கியதை நினைவூட்டி, இதே போல் அனைவரும் நல்லாசிரியர் விருது பெற சிறப்புடன் செயல்பட வேண்டும் என கூறினார்கள். 2 & 3 ம் வகுப்பிற்கு தமிழ் பாடம் திருச்சி, அரியலூர் மாவட்ட தொண்டர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. சிறப்பாக இருந்தது. க மேலே புள்ளி வைத்தால் க் என்ற பாடலை செல்வி. சந்தனம், செல்வி. கற்பகக்கனி சிறப்பாக பாடினார்கள். 1 முதல் 4 வகுப்பு வரை திருமதி. ஸ்ரீமதி மேடமும், திருமதி. ஆனந்தி மேடமும் ஆங்கில பாடம் சிறப்பாக நடத்தினார்கள். 1 முதல் 5 வகுப்பு வரை அறிவியல் & சமூக அறிவியலில் ஊர்ச் சந்தை நாடகம் சீர்காழி அலுவலக தொண்டர்களால் நடித்து காண்பிக்கப்பட்டது. மிகச்சிறப்பாக இருந்தது.

26.09.2018 1, 2 & 3 ம் வகுப்பு Maths பயிற்சி திருமதி. பிரபாவதி மற்றும் அவர்களின் குழுவினரால் கொடுக்கப்பட்டது. 4 & 5 ம் வகுப்பு Maths பயிற்சி திருமதி. கோமதி அவர்களால் கொடுக்கப்பட்டது. Prema Madam அனைத்து ஆசிரியர்களுக்கும் Warm-up சொல்லிக் கொடுத்தார்கள். நாட்டு மருத்துவக் குறிப்புகள் பற்றி பேசினார்கள். பின்பு பருத்தி ஆடைகள் அணிவது உடம்புக்கு நல்லது என்று கூறினார்கள்.

03.10.18 அன்று SCJ மைய ஆசிரியர்களுக்கும், 04.10.18 அன்று KIDS மைய ஆசிரியர்களுக்கும் II Term பயிற்சி அளிக்கப்பட்டன. இதில் 29 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். விதை முளைத்தலில் நெல் விதை போடவும், சொட்டு நீர் பாசனம் பற்றியும் கூறப்பட்டது. மையத்தில் நன்றாக பதில் கூறும் குழந்தையின் இடது கை விரலில் Smiling Face வரையுமாறு கூறப்பட்டது. News Paper மூலம் வட்டம், மரம், கிண்ணம், முட்டை போன்றவை செய்ய பயிற்சி அளிக்கப்பட்டது.

. 05.10.18 அன்று SCS மைய ஆசிரியர்களுக்கு II Term பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 13 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூகவியல் பாடங்கள் நடத்தப்பட்டன.

13.10.18 முதல் 17.10.18 ஆகிய தேதிகளில் அனைத்து SCJ, SCS மையங்களுக்கு Mid Test எடுக்கப்பட்டது.

27.10.18 அன்று SCJ, SCS Tutor க்கு Refresh Training நடைபெற்றது. இதில் 33 பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாவட்டம்

27-06-2018 முதல் 29-06-2018 வரை மூன்று தினங்களும் திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி கிராமத்தில் உள்ள நமது கிளை அலுவலகத்தில் 1st Term Training அளிக்கப்பட்டது. இதில் 28 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் (தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல்) பாடங்களை நமது வித்யாரம்பம் உபகரணங்களையும், சமச்சீர் பாடத்திட்டத்தினையும் இணைத்து பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் 21 பயிற்றுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 9 கிராமங்களில் 25 மையங்கள் (7 Kids, 9 Junior, 9 senior) 02-07-2018 அன்று ஆரம்பபிக்கப்பட்டது.

07-07-2018 மற்றும் 08-07-2018 இரண்டு நாட்களும் திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம் கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்க மெயின் பள்ளியில் 1st Term Training அளிக்கப்பட்டது. இதில் 20 ஆசிரியர்கள் கலந்துக் கொண்டனர். இதில் 16 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 3 கிராமங்களில் 16 மையங்கள் (4 Kids, 6 Junior, 6 Senior) 09-07-2018 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

14-7-2018- சனிக்கிழமை அன்று ULLAS Trust-ன் "Touch the soil" Programme திருச்சி மாவட்டம், ஊட்டத்தூர் கிராமத்தில் -ல் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைப்பெற்றது. இதில் 5 பள்ளிகளின் மாணவர்களும் கலந்துக் கொண்டனர். (சிறுகளப்பூர், வந்தலை கூடலூர், காணக்கிளியநல்லூர், காட்டூர் இராமநாதபுரம், ஊட்டத்தூர்). காலை 10.30 மணியளவில் ULLAS Volunteers திரு. சுகுமார், திரு. சரவணவேல் மற்றும் ஊட்டத்தூர் பள்ளி தலைமை ஆசிரியரின் தலைமையில் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு



அனைத்து பள்ளியின் 5 Toppers-களுக்கும் Scholarship Cheque வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 9thstd மாணவர்களுக்கு My diary of dream –என்ற வகுப்பும், 10thstd மாணவர்களுக்கு My planner- என்ற வகுப்பும் நடத்தப்பட்டது 12.30 மணியளவில் நிகழ்ச்சி முடிவடைந்தது.



28-7-2018 அன்று அனைத்து பயிற்றுனர்களுக்கும் Follow up training கொடுக்கப்பட்டது. இதில் 21 பயிற்றுனர்கள் கலந்துகொண்டனர்.



21-8-2018 முதல் 4-9-2018 வரை அனைத்து கிராமங்களிலும் கிராம வளர்ச்சி குழு - VDG (Parents meeting) நடத்தப்பட்டது. இதில் அனைத்து கிராமங்களிலும் உள்ள அனைத்து பெற்றோர்களும் அந்தந்த கிராமத்தில் உள்ள பள்ளியில் நடைப்பெற்ற VDG-ல் கலந்து கொண்டு வித்யாரம்பத்தினைப் பாராட்டி, நன்றி தெரிவித்தனர்.

27-8-2018 அன்று நமது வித்யாரம்பம் அறக்கட்டளையின் தலைவர் திரு. ரெங்கநாதன் ஐயா அவர்களின் பிறந்த நாளையொட்டி அன்று பள்ளிக்கு சென்று வெள்ளனூர் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு கடலைமிட்டாய் வழங்கப்பட்டது. அன்றே, 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு ELE வகுப்புகளும் மற்றும் 9,10.ம் வகுப்பு மாணவர்களுக்கு SUMMIT வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன.



27-8-18 முதல் SUMMIT வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு 16-10-18 அன்று முடிவடைந்தது,



செப் 8-9-18 முதல் 14-9-18 வரை முதல் பருவத்திற்குரிய Material list குழந்தைகளிடம் சோதிக்கப்பட்டது.

அக்.1,2 ஆகிய இரு தேதிகளில் திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி கிளை அலுவலகத்தில் 2nd Term Training அளிக்கப்பட்டது. இதில் 15 பயிற்றுநர்கள் கலந்துகொண்டனர். முதல் நாள் Kids, SCJ.க்கான தமிழ், ஆங்கிலம், மற்றும் கணிதம் பாடங்கள்

நடத்தப்பட்டன. இரண்டாம் நாள் SCS-க்கான தமிழ் ஆங்கிலம், மற்றும் கணிதம் பாடங்களும் SCJ, SCS-க்கான அறிவியல், சமூக அறிவியல் பாடத்திற்கான செயல்பாடுகள் சொல்லிதரப்பட்டது.

17-10-18 முதல் 30-10-18 வரை அனைத்து மையங்களிலும் (SCJ, SCS) Mid Test எடுக்கப்பட்டது. அனைத்து மையங்களிலும் உள்ள மாணவர்கள் சற்று முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

25.10.18 அன்று திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள 2 கிராமங்களில் (அய்யம்பாளையம், சித்தரேவு) உள்ள மையங்களை திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. ரோஸி மரியாள் மற்றும் மதிப்பீட்டாளர் ஹேமா மற்றும் திண்டுக்கல் மாவட்ட மதிப்பீட்டாளர் திருமதி ராமேஸ்வரி ஆகியோர்களால் பார்வையிடப்பட்டது. மையங்களில் 2nd Term syllabus –க்கு ஏற்றாற்போல் பயிற்றுநர்கள் சிறப்பாக பாடங்களை நடத்தியுள்ளனர்.

## அரியலூர் மாவட்டம்

28.06.2018 அன்று திருமானூர் கிளை அலுவலகத்தில் I-TERM SCS பயிற்சியும், 29.06.2018 அன்று SCJ பயிற்சியும், 30.06.2018 அன்று KIDS பயிற்சியும் அளிக்கப்பட்டது. இதில் 10 கிராமங்களிலிருந்து 27 வித்யாரம்பம் Tutor - க்கு ஒருங்கிணைப்பாளர் மற்றும் மதிப்பீட்டாளரை கொண்டு பயிற்சி கொடுக்கப்பட்டது.



02.07.2018 அன்று 10 கிராமங்களில் 27 மையங்கள் தொடங்கப்பட்டது



.

21.7.2018 முதல் 22.7.2018 வரை KIDS, SCJ, SCS Tutor - க்கு I - Term Follow up Training கொடுக்கப்பட்டது.

4.10.2018 முதல் 6.10.2018 வரை KIDS, SCJ, SCS Tutor- க்கு II-Term Training கொடுக்கப்பட்டது.







18.8.2018 அன்று இலந்தைக்கூடம் கிராமத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் முன்னிலையில் TOUCH THE SOIL PROGRAME நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு 4 பள்ளிகளில் 5 Toppers - களுக்கு $9^{th}$std மற்றும் $10^{th}$std மாணவர்களுக்கு Scholarship வழங்கப்பட்டது.



27-08-2018 அன்று முதல் 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு ELE வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் VT மையங்களுக்கு பெற்றோர் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அவர்களது கருத்துகளை தெரிவித்தனர்.





# நாகப்பட்டினம் மாவட்டம்



28.06.2018, 29.06.2018 மற்றும் 30.06.2018 ஆகிய தேதிகளில் Kids, Junior, Senior மையங்களின் ஆசிரியர்களுக்கு முதல் பருவ பயிற்சிக் கொடுக்கப்பட்டது.

02.07.2018 அன்று Kids, Junior, Senior மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.





அனைத்து மையங்களிலும் விதை முளைத்தல் activity செய்யப்பட்டது. விதை முளைத்து வந்தவுடன் குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.





**ஆசிரியர் கூட்டம்**



28.07.2018 அன்று மைய ஆசிரியர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மையத்தில் நடத்தும் வித்யாரம்ப பொருள்களில் ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் மையத்திற்கு குறித்தநேரத்திற்கு செல்ல வேண்டும் என்றும் குழந்தைகளிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டது.



18.08.2018 அன்று திருவெண்காடு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ULLAS TRUST ன் Touch the soil Program நடைப்பெற்றது. இதில் மேலச்சாலை, பெருந்தோட்டம், திருவாலி ஆகிய பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றும் திருவெண்காடு தலைமை ஆசிரியர் பெற்றோர்களும் கலந்துக்கொண்டனர் நான்கு பள்ளிகளில் பயிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களில் முதல் 5 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ULLAS TRUST ன் மூலம் உதவித்தொகை வழங்கினார்கள்.



27.08.2018 அன்று வித்யாரம்ப அறக்கட்டளையின் தலைவர்V. ரெங்கநாதன் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடபட்டது. அதில் சீர்காழி அலுவலகத்தில் உள்ளதிருமதி. T. கார்த்திகா மேடம், ஒருங்கிணைப்பாளர், மதிப்பீட்டாளர்கள் மற்றும் கணிணி பயிற்றுனர்கள் கலந்துகொண்டனர். அன்று ELE மையங்கள் ஆரம்பிக்கபட்டன.





22.09.2018 அன்று VDG Meeting சட்டநாதபுரம் பள்ளியில் நடைபெற்றது. இதில் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் வித்யாரம்ப அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பாளர், மதிப்பீட்டாளர்கள். ELE ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



03.10.2018, 04.10.2018 மற்றும் 05.10.2018 ஆகிய தேதிகளில் Kids, Junior, Senior மையங்களின் ஆசிரியர்களுக்கு இரண்டாம் பருவபயிற்சிக் கொடுக்கப்பட்டது.





18.10.2018 அன்று ஆயுதபூஜை கொண்டாடப்பட்டது. இதில் ஒருங்கிணைப்பாளர், மதிப்பீட்டாளர்கள், ELE ஆசிரியர்கள் மற்றும் கணிணி பயிற்றுனர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டன.

23.10.2018 அன்று மஞ்சகுப்பம் பள்ளி ஆசிரியர்கள் திருமதி. ஜெயந்தி மற்றும் திருமதி. முத்துலெட்சுமி அவர்களுக்கு வித்யாரம்பம் Materials Kids, Junior, Senior Kit Box Training கொடுக்கப்பட்டது. 25.10.2018 முதல் 31.10.2018 ஆகிய தேதிகளில் SCJ, SCS மையங்களுக்கு Mid Test Report எடுக்கப்பட்டது.



## ரோட்டரி வித்யாரம்பம் பள்ளி, சாமந்தான்பேட்டை, நாகப்பட்டினம்.

04.06.2018 அன்று 2018-2019 கல்வி ஆண்டிற்காக பள்ளி துவங்கப்பட்டது



12.06.2018 அன்று திருமதி பிரேமா மேடம், ஸ்ரீமதி மேடம் பள்ளிக்கு விஜயம் செய்து இந்த கல்வி ஆண்டிற்கான பாட செயல்பாடு, குறிப்புகள், பொறுப்புகள் போன்றவற்றை செயல்படுத்தினர்.



02.07.2018 முதல் 06.07.2018 வரை வனமஹா உற்சவ வாரம் கொண்டாடப்பட்டது.

06.07.2018 அன்று வன மஹா உற்சவ விழா கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக ஓய்வுப்பெற்ற தலைமையாசிரியர் முத்தமிழ் ஆனந்தன் அவர்களும் தோட்டக்கலை நிபுணர். S. நீதிமாணிக்கம் அவர்களும் கலந்துக்கொண்டனர்.

16.07.2018 அன்று காமராசர் பிறந்த நாள் மற்றும் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டது.



15.08.2018 அன்று 72 வது சுதந்திரதினம் மூத்த குடிமக்கள் மற்றும் மாணவர்களுடன் சிறப்பாக கொண்டாடி இனிப்புகள் வழங்கப்பட்டன.

23.08.2018 மற்றும் 24.08.2018 அன்று திருமதி பிரேமா மேடம் , ஸ்ரீமதி மேடம் பள்ளிக்கு வருகைப்புரிந்தார்கள்.

27.08.2018 Founders day கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.






05.09.2018அன்று ஆசிரியா்தினம் கொண்டாடப்பட்டது. அனைத்து ஆசிரியா்களுக்கும் இனிப்புடன் நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.



14.09.2018 அன்று விநாயகா் சதுா்த்தி கொண்டாடப்பட்டது. விநாயகா் படம் வரைந்து அது உணா்த்தும் கருத்துகள் பற்றி ஆசிரியா்கள் மாணவா்களிடம் கூறினாா்கள்.

17.09.2018 அன்று முதல் பருவ தொகுத்தறிவுத் தோ்வு ஆரம்பிக்கப்பட்டது.




21.09.2018 அன்று சிறந்த ஆசிரியா்களுக்கான விருதுகள் நம் பள்ளி ஆசிரியா்களுக்கு வழங்கப்பட்டது.

22.09.2018 முதல் பருவத் தொகுத்தறிவுத் தோ்வு முடிவு பெற்றது. மாணவா்களுக்கு முதல் பருவ விடுமுறை அளிக்கப்பட்டது.



03.10.2018 முதல் பருவ விடுமுறை முடிந்து இரண்டாம் பருவம் ஆரம்பிக்கப்பட்டு பள்ளி திறக்கப்பட்டது. காந்தி ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. பள்ளி உதவி பணியாளா்களுக்கு கைத்தறி நெசவுப்புடவைகள் வழங்கி. கௌரவிக்கப்பட்டாா்கள். காமராசா் நினைவு நாள் கொண்டாடப்பட்டது



11.10.2018 நவராத்திரி கொலு சிலைகள் வைத்து பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவா்களுக்கு சுண்டல் வழங்கப்பட்டது.



13.10.2018 அன்று ஆசிரியர்களுக்கு இரண்டாம் பருவத்திற்கான பாட செயல்பாடுகள் குறித்த வழிமுறைகள் வழங்கப்பட்டன.

19.10.2018 விஜய தசமி விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியர்களுக்கு இனிப்புகள் உதவி பணியாளர்களுக்கு இனிப்பு பொட்டலம் வழங்கப்பட்டன.

25.10.2018 திரு. புகழேந்தி BEO அவர்கள் பள்ளியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

## சென்னை

15.12.2017 - ம் தேதிகளில் திரு..பட்டாபிராமன், அவர்கள் பெரும் முயற்சியால் Chola MS Insurance MD திரு. கோபால ரத்தினம் அவர்களால் TOY VAN வித்யாரம்பத்திற்கு வழங்கபட்டது.





25.05.2018 - ம் தேதிகளில் திருமதி. பிரேமா வீரராகவன், திருமதி. ஸ்ரீமதி, திருமதி. ஆனந்தி ஆகியோரால் முதல் பருவ பயிற்சிக்கு புதிய ஆசிரியர்கள் நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 30.05.2018 மற்றும் 31.05.2018 ஆகிய தேதிகளில் 2018 - 2019 கல்வியாண்டிற்கான முதல் கட்ட பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டது.

28.06.2018, 29.06.2018 மற்றும் 02.07.2018, 10.07.2018 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக புதிய ஆசிரியர்களுக்கு திருமதி. ஆனந்தி அவர்களால் சென்னை Easy Learning English மையத்திற்கான முதல் பருவ பயிற்சிக் அளிக்கப்பட்டு புதிய ஆசிரியர்களுக்கு தேர்வு நடத்தப்பட்டது. வித்யாரம்பம்





ஆசிரியர்களுக்கும், புதிய ஆசிரியர்களுக்கும் 30.07.2018 & 31.07.2018 ஆகிய தேதிகளில் திருமதி. ஸ்ரீமதி மற்றும் திருமதி. ஆனந்தி அவர்களால் Grammar Activities செயல்முறை பயிற்சிக் கொடுக்கப்பட்டது. இதில் மறைமலைநகர் ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள்.



11.07.2018 அன்று OPEN, AVOCarbon/ Bringing Smile (Sponsorsக்கான) மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.





17.07.2018 அனைத்து மையங்களிலும் Diagnostic தேர்வு ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்கள் ஆர்வமுடன் கலந்துக்கொண்டு தேர்வு எழுதினார்கள்.




ஓவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் Easy Learning English ஆசிரியர்கள் அனைவரும் சென்னை அலுவலகத்தில் ஒன்று சேர்ந்து தங்களுக்கான பாட சம்பந்தமான சந்தேகங்களையும், கருத்துக்களையும் கேட்டு பரிமாறிக்கொள்வார்கள். ஆசிரியர்கள் அனைவரும் Grammar Activity - ஐ செயல்முறை மூலம் விளக்குவார்கள்..





நன்றி

Editor: Coordinators
(For private circulation only)

Vidyarambam Trust
Park View Apartments, II floor,
No: 85/94, G.N.Chetty Road,
T.Nagar, Chennai – 600 017

Website: www.vidyarambam.org
Phone: 044 -28152590
Email: vidyarambam@gmail.com